# தேசிய வருமானமும் செலவும்

## பொதுவான போக்குகள்

1994 இல் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொஉஉ) 1982 நிலையான விலைகளின்படி 5.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் பொருளாதார தாராளமயமாக்கல் மற்றும் அமைப்புச் சீராக்கங்களினால் உந்தப்பட்ட தொடர்ச்சியான வளர்ச்சி விசையினைப் பிரதிபலிப்பதாகவும் காணப்பட்டது. முன்னைய ஆண்டில் 6.9 சதவீத உச்ச வளர்ச்சி வீதத்தினைக்கொண்ட உயர்வான உற்பத்தி மட்டம் அடையப்பட்டிருக்கையில் இவ்வளர்ச்சி வீதமானது பாராட்டிற்குரியதொன்றாகும். பொதுவான பொருளாதார வளர்ச்சிக்கு அனைத்துத் துறைகளும் தொடர்ந்து உறுதியான பங்களிப்பை வழங்கின. வேளாண்மை, தயாரிப்பு, கட்டுமானம், வர்த்தகம் மற்றும் நிதி ஆகிய துறைகளில் கணிசமான உற்பத்தி அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன.

மொத்த உள்நாட்டு உற்பத்தியை வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்திற்குச் சீராக்கஞ் செய்யப்பட்ட பின்னர் பெறப்படும் மொத்தத் தேசிய உற்பத்தி (மொதேஉ) 1993 இன் 7.7 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 5.3 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியுடன். ஒப்பிடுகையில் மொத்த தேசிய உற்பத்தியின் சிறிதளவு குறைந்த வளர்ச்சியானது 1994 இல் தேறிய காரணி வருமானத்தின் அதிகரித்த வெளிப்பாய்ச்சலைப் பிரதிபலிப்பதாக இருந்தது. வெளிப்பாய்ச்சலின் அதிகரிப்புக்கு, மேற்கு நாடுகளின் அதிகரித்த வட்டி வீதங்கள் உள்நாட்டு வட்டி வீதங்களின் குறைப்பு மற்றும் உள்நாட்டுச் சந்தையின் நிச்சயமற்ற தன்மை என்பனவற்றை ஓரளவு காரணமாகக் கூறலாம்.

உற்பத்தியின் துறைவாரியான பகுப்பாய்வானது அனைத்துத் துறைகளும் மொத்த தேசிய உற்பத்தியின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்த வேளையில் தயாரிப்புத் துறையானது ஏனைய அனைத்துத் துறைகளைவிடவும் மேம்பட்ட செயலாற்றத்தைக் கொண்டிருந்தமையைக் குறித்துக் காட்டியது. கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதியினால் உந்தப்பட்டு தயாரிப்புத் துறை 1993 இன் 10.5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1994 இல் உண்மை நியதிகளில் 9.1 சதவீத வளர்ச்சி வீதத்தினைப் பதிவுசெய்தது. 1994 இல் மொத்த தேசிய உற்பத்தியின் பொதுவான வளர்ச்சிக்கு தயாரிப்புத் துறையின் பங்களிப்பு 33 சதவீதமாக அமைந்தது. மொத்த தேசிய உற்பத்தியின் வளர்ச்சியில் வேளாண்மை மற்றும் வர்த்தகத் துறைகளின் பங்களிப்பானது முறையே கணிசமான உயர் வீதமாகிய 13 சதவீதமாகவும் 26 சதவீதமாகவும் அமைந்தது. 1994 இல் நிலவிய சாதகமான வானிலைத் தன்மைகள் தேயிலை, இறப்பர், தெங்கு, நெல் மற்றும் துணை உணவுப் பயிர்களின் சார்பு ரீதியிலான உயர் உற்பத்தி அளவுக்கு காரணமாயின. காட்டுத் தொழில் மற்றும் மீன்பிடித் தொழிலையும் உள்ளடக்கிய வேளாண்மைத் துறையானது ஆய்வுக்குரிய காலப்பகுதியில் 3.3 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டில் பெறப்பட்ட வளர்ச்சியானது 4.9 சதவீதமாக அமைந்திருந்தது. 1992 இல் நிலவிய வரட்சியின் காரணமாக அவ்வாண்டில் குறைந்த உற்பத்தியினைக்

கொண்டிருந்த பல பயிர்களின் தாழ்ந்த உற்பத்தி மட்டத்தினைவிட இவ்வளர்ச்சி கூடுதலாகக் காணப்பட்டது. கட்டுமானத்துறைக்கு அண்மைக் காலங்களில் பதிவு செய்யப்பட்ட உயர் வளர்ச்சி வீதங்களை நிலைப்படுத்திக்கொள்ள இயலுமாக இருந்தது. இது நாட்டின் நீண்டகால முதலீட்டுச் சூழலின் தொடர்ச்சியான சாதகத் தன்மையினையும் பிரதிபலிப்பதாக இருந்தது. கட்டுமான நடவடிக்கைகளின் விரிவாக்கமானது சுரங்க அகழ்வு மற்றும் கல்லுடைத்தல் துறையின் வளர்ச்சிக்கு உந்து சக்தியாகவும் அமைந்தது. இத்துறை 1994 இல் 6.0 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. இரத்தினக் கற்களுக்கான ஏற்றுமதிக் கேள்வியின் அதிகரிப்பானது ஏற்றுமதிசார்ந்த சுரங்க அகழ்வுத் துணைத் துறையின் செயலாற்றத்தை ஊக்குவித்த வேளையில் அகழ்வுத் துணைத்துறையின் உற்பத்திப் பொருட்களுக்கு தயாரிப்பு மற்றும் கட்டுமானத்துறையிலிருந்து எழுந்த அதிகரித்த உள்நாட்டுக் கேள்வியின் காரணமாக அகழ்தல் துணைத்துறை விரிவடைந்தது. பொருளாதாரத்தின் முதலாந்தர இரண்டாந்தரத் துறைகளின் உறுதியான வளர்ச்சிக்கு இசைந்து செல்லும் வகையில் பணிகள்துறை 1993 இன் 6.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1994 இல் மேலும் 5.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

பணிகளைப் பொறுத்தவரையில் மொத்த மற்றும் சில்லறை விற்பனை, மற்றும் வங்கித் தொழிலும் நிதியியல் பணிகளும் ஆகிய துறைகள் உறுதியான வளர்ச்சியினைப் பதிவு செய்தன. உண்மை நியதிகளில் ஏற்றுமதிகளில் 12.8 சதவீத வளர்ச்சியும், இறக்குமதிகளில் 9.4 சதவீத வளர்ச்சியும் வர்த்தகத் துறையின் உறுதியான வளர்ச்சிக்கு அடிப்படையை வழங்கின. பொருளாதாரத்தின் முதன்மைத்துறைகளின் விரிவாக்கத்துடன் இணைந்த அதிகரித்த நிதியியல் நடவடிக்கைகளானவை 1994 இல் வங்கித் தொழில் காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்துக்கள் துணைத்துறையில் 9.5 சதவீத வளர்ச்சியை ஏற்படுத்தின. மின்வலு, வாயு மற்றும் நீர் வழங்கல் சுகாதாரப் பணிகள் துணைத்துறை 9.9 சத வீதத்தினால் வளர்ச்சியடைந்தது. முன்னைய ஆண்டைவிட 7.7 சதவீதத்தினால் நீர்மின்வலு உருவாக்கம் அதிகரித்தமையே இதற்கான பெருமளவு காரணமாகும். சுற்றுலா வருகைகளின் 3.9 சதவீத அதிகரிப்பின் காரணமாக சுற்றுலா மற்றும் சுற்றுலாவுடன் தொடர்புடைய பணிகள் 1994 இல் மிதமான மேம்பாட்டைக் காட்டின. சுற்றுலாவையும் அதனுடன் தொடர்புடைய பணிகளையும் உள்ளடக்கிய பணிகள் துறை 2.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

நிலையான காரணிச் செலவு விலைகளில் (1982) மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூ. 159 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இது முன்னைய ஆண்டைவிட 5.6 சதவீத அதிகரிப்பாகும். நிலையான காரணிச் செலவு விலைகளில் (1982) மொத்த தேசிய உற்பத்தி 1993 இனைவிட 5.3 சதவீதத்தினால் அதிகரித்து 1994 இல் ரூ. 157 பில்லியனாக விளங்கியதென மதிப்பிடப்பட்டுள்ளது. உள்நாட்டு உயர் வட்டி வீதங்களினதும் மேலைத்தேச சந்தைகளின் குறைந்த வட்டிவீதங்களினதும் காரணமாக இலாபங்களின் வெளி அனுப்பல்கள் கட்டுப்படுத்தப்பட்டிருந்த 1993 இன் நிலைமைக்கு மாறாக 1994 இல் இவ் வட்டி வீதங்கள் அதிகரித்த வெளிப் பாய்ச்சலுக்கு இட்டுச் சென்றது. அத்துடன் உள்நாட்டுச் சந்தையில் நிலவிய உறுதியற்ற தன்மையும் மூலதன வெளிப்பாய்ச்சலுக்குக் காரணமாயிருந்தது. மத்திய வங்கியினால் வைத்திருக்கப்பட்ட வெளிநாட்டுச் சொத்துக்களின் வளர்ச்சியானது 1994 இல் முதலீட்டு வருமானத்தில் நேரிணையான அதிகரிப்பொன்றினை

விளைவித்தபோதிலும் அதிகரித்த வெளிப்பாய்ச்சலை ஈடுசெய்வதற்கு அது போதுமானதாகக் காணப்படவில்லை. இதன் விளைவாக தேறிய காரணி வருவாயின் வெளிப்பாய்ச்சல் அதிகரித்தது.

1994 இல் நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொத்த தேசிய உற்பத்தி ரூ. 515 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன் 1993 இல் அறிவிக்கப்பட்ட ரூ. 447 பில்லியன் மட்டத்தினைவிட இது 15.2 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. மற்றும் இதன் விளைவாக பொருளாதாரத்தின் பொதுவான விலை மாற்றங்களை அளவிடும் உள்ளடக்க மொதேஉ விலைச்சுருக்கி 1994 இல் 9.4 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1993 இன் நேரிணையான 9.5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1994 இன் பொருளாதாரத்தின் பொதுவான விலைமட்டத்தின் அதிகரிப்பில் சிறிதளவு அதிகரிப்பினை பிரதிபலிக்கின்றது.

1994 இல் இலங்கையின் நடுவாண்டுக் குடித்தொகை 178.7 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் தலைக்குரிய மொத்தத்தேசிய உற்பத்தி ரூ. 28,843 (ஐ.அ.டொலர் 584) என மதிப்பிடப்பட்டுள்ளதோடு 1993 இல் பதிவு செய்யப்பட்ட ரூ. 25,377 (ஐ.அ.டொலர் 526) இனைவிட 13.7 சதவீத அதிகரிப்புமாகும். உண்மை நியதிகளில் 1994 இல் தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி 3.9 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

பொருளாதாரத்தில் சருவதேச வர்த்தகம் தொடர்ந்து வகிக்கும் முக்கியத்துவத்தின் காரணமாக ஏற்றுமதி இறக்குமதிகளின் சார்பு ரீதியான விலைகளில் (வர்த்தக மாற்று விகிதம்) ஏற்படும் ஏதேனும் மாற்றங்கள் தேசிய வருமானத்தின் மீது தாக்கத்தினைக் கொண்டுள்ளன. நாட்டின் உண்மையான மொத்த தேசிய உற்பத்தியின் கொள்வனவுச் சக்தியை மதிப்பிடும் உண்மை தேசிய வருமானத்தை அளவிடுகையில் இத்தாக்கத்தினை சீர்படுத்தக்கூடியதாக இருக்கும். 1994 இல் பொதுவான வர்த்தக மாற்றுவிகிதம் 1993 இன் 2.0 சதவீத மேம்பாட்டுக்கு மாறாக 4.7 சதவீதத்தினால் மோசமடைந்தது. இதன்விளைவாக வர்த்தக மாற்று விகிதத்தின் தாக்கத்திற்குச் சீராக்கஞ் செய்யப்பட்ட உண்மை மொத்த தேசிய உற்பத்தியாகிய உண்மைத் தேசிய வருமானம் 1993 இல் 8.4 சதவீத அதிகரிப்புக்கு எதிராக 1994 இல் 4.3 சதவீதத்தினால் அதிகரித்தது.

மறைமுக வரிகளிலிருந்து உதவிக் கொடுப்பனவுகள் கழிக்கப்பட்ட பின்னான தாக்கத்திற்கு நடைமுறைக் காரணிச் செலவுகளில் மொத்த தேசிய உற்பத்தியினைச் சீராக்கம் செய்து பெறப்பட்ட நடைமுறைச் சந்தை விலைகளிலான மொத்தத் தேசிய உற்பத்தி 1993 இன் ரூ. 500 பில்லியனிலிருந்து 1994 இல் ரூ. 576 பில்லியனுக்கு 15.2 சதவீதத்தினால் அதிகரித்தது. நேரிணையாக நடைமுறைச் சந்தை விலைகளில் தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி 1993 இன் ரூ. 28,357 இலிருந்து (ஐ. அ. டொலர் 588) 1994 இல் ரூ. 32,231 இற்கு (ஐ. அ. டொலர் 652) 13.7 சதவீதத்தினால் அதிகரித்தது.

செலவுப் பக்கத்தில் 1994 இல் நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டுச் செலவு ரூ. 648 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளதோடு 1993 இற்கு

மதிப்பிடப்பட்ட ரூ. 547 பில்லியன் மட்டத்தினைவிட 18.3 சதவீத அதிகரிப்பாகும். பெயரளவு நியதிகளில் நுகர்வுச் செலவு 17.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ள வேளையில் மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் 22.4 சதவீதத்தினால் ரூ. 154 பில்லியனுக்கு அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதே வேளையில் 1994 இல் நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமொன்றாக முதலீடுகள் 27 சதவீதமாக விளங்கின. மொத்த முதலீடுகளில் பெரும்பாலும் 88 சதவீதமானவை பொறிகள் கருவிகள், போக்குவரத்து உபகரணங்கள் கட்டுமானம் மற்றும் தொலைத்தொடர்பு என்பனவற்றில் முதலீட்டுச் செலவுகள் கணிசமாக விளங்கிய தனியார் துறையிலே உருவாக்கப்பட்டது. அதேவேளை அரச துறையின் முதலீடானது முன்னைய ஆண்டைப்போன்று தொலைத்தொடர்பு, துறைமுகப் பணிகள், குழாய் நீர் விநியோகம் மற்றும் தெருக்கள் போன்ற உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

உண்மை நியதிகளில் 1993 இன் 7.1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1994 இல் ஓரளவு மெதுவான 6.4 சதவீத வளர்ச்சியைக் கொண்டிருந்த போதிலும் நுகர்வுச் செலவு தொடர்ந்து அதிகரித்தது. இதேவேளையில் உண்மை நியதிகளில், 1993 இல் 12.8 சதவீதத்தினால் அதிகரித்த நிலையான மூலதன உருவாக்கம் 1994 இல் 9.1 சதவீத மிதமான வளர்ச்சியைக் கொண்டிருந்தது. அரச முதலீட்டின் குறைப்பும் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் மிதமான தன்மையும் 1994 இல் முதலீட்டின் வளர்ச்சி குறைந்தமைக்கான காரணமாகும் எனக் கூறப்படுகின்றது.

உள்நாட்டுச் சேமிப்புக்கள் ரூ. 88 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளதோடு 1993 இற்கு மதிப்பிடப்பட்ட ரூ. 80 பில்லியனைவிட 9.5 சதவீத அதிகரிப்புமாகும். இதன்படி 1993 இல் 15 சதவீதத்திலிருந்து 16 சதவீதத்திற்கு மேம்பாடடைந்த சேமிப்பு விகிதம் 1994 இல் 15.2 வீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தனியார் தேறிய பண அனுப்பல்களுக்கும் வெளிநாட்டுத் தேறிய காரணி வருவாய்க்கும் சீராக்கஞ் செய்யப்பட்ட உள்நாட்டுச் சேமிப்பாகிய தேசிய சேமிப்பு ரூ. 111 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளதோடு சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமொன்றாக 1994 இல் இது 19.1 சதவீதமாக விளங்கியது. ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டின் சேமிப்பு விகிதம் 20.3 சதவீதமாகும்.

### துறைவாரியான செயலாற்றம்

வேளாண்மைத்துறை முன்னைய ஆண்டின் 4.9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1994 இல் 3.3 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. நெல், தேயிலை, தெங்கு மற்றும் ஏனைய பல உணவுப் பயிர்களின் உயர்ந்த உற்பத்தி மட்டங்கள் 1994 இல் அவ்வேளாண்மைத் துறையின் வளர்ச்சியை உருவாக்க உதவிய முக்கிய பண்புகளாகக் காணப்பட்டன. சாதகமான வானிலைத் தன்மைகள் வேளாண்மைத் துறையின் தொடர்ச்சியான வளர்ச்சிக்குச் சாதகமாக அமைந்தன. எனினும் "ஏனைய வேளாண்மை" துணைத் துறையின் சிறிதளவு வீழ்ச்சியானது பொதுவான வேளாண்மைத் துறையின் வளர்ச்சியினைச் சோர்வடையச் செய்தது.

1994 இல் பெருந்தோட்ட வேளாண்மையில் தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு உற்பத்தி முறையே 4.4 சதவீத 1.0 சதவீத மற்றும் 20.6 சதவீத வளர்ச்சி

வீதங்களை பதிவு செய்தது. இதேவேளையில் நெல் துணைத்துறையின் வெளியீடு 1993 இன் உற்பத்தி மட்டத்தினைவிட 4.7 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இந்த முதன்மைப் பயிர்களின் கவர்ச்சியான உற்பத்தி 0.1 சதவீத சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவுசெய்த ஏனைய வேளாண்மைத் துறையின் நலிவடைந்த செயலாற்றத்தை ஓரளவு எதிரீடு செய்தது. "ஏனைய வேளாண்மைத்" துணைத் துறையில் துணை உணவுப் பயிர்கள், கரும்பு, கால்நடை வளர்ப்பு மற்றும் பண்ணை உற்பத்திகள் பொருட்கள் ஆகியவற்றின் வெளியீட்டில் அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டது. அதேவேளையில் சிறு ஏற்றுமதிப் பயிர்களும் மரக்கறி வகைகளும், பழவர்க்கங்களும் ஆகியவற்றின் வெளியீடு பின்னடைவினைக் கொண்டிருந்தது. மீன்பிடித் துணைத்துறையின் வளர்ச்சிவீதம் 1993 இன் 7.1 சதவீதத்திலிருந்து 1994 இல் 1.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் காட்டுத்தொழில் துணைத்துறை முன்னைய ஆண்டைப் போலவே சிறிதளவு வீழ்ச்சியினைப் பதிவு செய்தது. அண்மைக் காலங்களில் மிதமிஞ்சிய தறிப்பின் காரணமாக மர மூலவளங்கள் அருகிவருவதைப் பிரதிபலித்தது.

1994 இல் பொருளாதார வளர்ச்சிச் செயல் முறையின் முக்கிய உந்து சக்தியானது ஓரளவு குறைந்த வேகத்திலாயினும் தயாரிப்புத் துறையிலிருந்தே பெறப்பட்டது. முழுமையாகக் கொள்ளுமிடத்து இத்துறை, நிலையான காரணிச் செலவு (1982) விலைகளின் கூட்டிய பெறுமதியில் முன்னைய ஆண்டின் 10.5 சதவீத வளர்ச்சிக்கு எதிராக 1994 இல் 9.1 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. தயாரிப்புத் துறையினுள் கூட்டிய பெறுமதிக்கும் ஏற்றுமதி வருவாய்க்குமான பங்களிப்பு நியதிகளில் அதி முக்கிய துணைத்துறையாகிய தொழிற்சாலைக் கைத்தொழில் 1994 இல் 8.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டில் இத்துணைத்துறையின் வளர்ச்சி 11.3 சதவீதமாகும். தொழிற்சாலைக் கைத்தொழிலின் வளர்ச்சிக்கு சிஎஉ நியதிகளில் 10.7 சதவீதத்தினால் விரிவடைந்த கைத்தொழில் ஏற்றுமதிகள் துணைநின்றன. 1994 இல் உறுதியான செயலாற்றத்தைப் பதிவு செய்த தொழிற்சாலைக் கைத்தொழில்களின் கீழான கைத்தொழில் வகைகளாக உணவும் குடிபானமும், புடவை அணியும் ஆடைகள் தோல் உற்பத்திப் பொருட்கள் உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திப் பொருட்கள் என்பன விளங்கின. பெருந்தோட்ட வேளாண்மை வெளியீட்டின் வளர்ச்சியானது தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு பதனிடல் கைத்தொழிலின் கூட்டிய பெறுமதியினை உண்மை நியதிகளில் 1993 இன் 8.4 சதவீத அதிகரிப்புக்கு எதிராக 13 சதவீதத்திற்கு அதிகரிக்கச் செய்தது. அதிகரித்த பொருளாதார நடவடிக்கைகளையும் தொழிற்சாலைக் கைத்தொழில்களின் தெம்பினையும் தொடர்ந்து சிறுகைத்தொழில் துணைத்துறை 1994 இல் 5.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. "ஏனைய கைத்தொழில்கள்" துணைத்துறை 1993 இன் 6.4 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 6.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இந்த வகையான கைத்தொழிலின் வளர்ச்சிக்கான மிக முனைப்பான காரணியாக அரிசி ஆலைக் கைத்தொழிலின் விரிவாக்கம் விளங்கியது.

1994 இல் இத்துறையின் கூட்டிய பெறுமதி 6.0 சதவீதத்தினால் அதிகரித்ததைத் தொடர்ந்து மூன்றாவது தொடர்ச்சியான ஆண்டாக கட்டுமானத்துறை கவர்ச்சிகரமான வளர்ச்சியினைப் பதிவு செய்தது. இத்துறையின் உறுதியான

## அட்டவணை 1.6

### (1982) விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கமும் அதிகரிப்பும் 1992 – 1994

| வகை | கூட்டப்பட்ட பெறுமதி (ப.இ. ரூ.) | | | மொத்தத் தேசிய உற்பத்தியில் சதவீதப் பங்கு | | | முன்னைய ஆண்டுக்கு மேலான அதிகரிப்பு (ப.இ. ரூ.) | | மொத்த தேசிய உற்பத்தி அதிகரிப்பின் சதவீதப் பங்கு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1992* | 1993* | 1994* | 1992* | 1993* | 1994* | 1993* | 1994* | 1993* | 1994* |
| 1. வேளாண்மை, காட்டுத் தொழில், கடற்றொழில் ... | 30,090 | 31,554 | 32,593 | 21.8 | 21.2 | 20.8 | 1,464 | 1,039 | 13.7 | 13.1 |
| 1.1 வேளாண்மை ... | 25,316 | 26,592 | 27,596 | 18.3 | 17.9 | 17.6 | 1,276 | 1,004 | 12.0 | 12.7 |
| 1.1.1 தேயிலை ... | 2.303 | 2,985 | 3,116 | 1.7 | 2.0 | 2.0 | 682 | 131 | 6.4 | 1.7 |
| 1.1.2 இறப்பர் ... | 669 | 681 | 688 | 0.5 | 0.5 | 0.4 | 12 | 7 | 0.1 | 0.1 |
| 1.1.3 தெங்கு ... | 2,971 | 2,799 | 3,376 | 2.2 | 1.9 | 2.2 | -172 | 577 | -1.6 | 7.3 |
| 1.1.4 நெல் ... | 5,882 | 6,447 | 6,750 | 4.3 | 4.3 | 4.3 | 565 | 303 | 5.3 | 3.8 |
| 1.1.5 ஏனையவை ... | 13,491 | 13,680 | 13,666 | 9.8 | 9.2 | 8.7 | 189 | -14 | 1.8 | -0.2 |
| 1.2 காட்டுத் தொழில் ... | 2,149 | 2,151 | 2,147 | 1.6 | 1.4 | 1.4 | 2 | -4 | 0.0 | -0.1 |
| 1.3 கடற்றொழில் ... | 2,625 | 2,811 | 2,850 | 1.9 | 1.9 | 1.8 | 186 | 39 | 1.7 | 0.5 |
| 2. சுரங்கம் அகழ்தலும், கல் உடைத்தலும் ... | 3,300 | 3,693 | 3,915 | 2.4 | 2.5 | 2.5 | 393 | 222 | 3.7 | 2.8 |
| 3. தயாரிப்புத் தொழில் ... | 26,059 | 28,806 | 31,418 | 18.9 | 19.4 | 20.1 | 2,747 | 2,612 | 25.8 | 33.0 |
| 3.1 தேயிலை, இறப்பர், தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் பதனிடல் ... | 2,912 | 3,157 | 3,567 | 2.1 | 2.1 | 2.3 | 245 | 410 | 2.3 | 5.2 |
| 3.2 தொழிற்சாலைக் கைத்தொழில் ... | 21,140 | 23,529 | 25,600 | 15.3 | 15.8 | 16.3 | 2,389 | 2,071 | 22.4 | 26.1 |
| 3.3 சிறு கைத்தொழில் ... | 1,150 | 1,208 | 1,277 | 0.8 | 0.8 | 0.8 | 58 | 69 | 0.6 | 0.9 |
| 3.4 ஏனையவை ... | 857 | 912 | 974 | 0.6 | 0.6 | 0.6 | 55 | 62 | 0.5 | 0.8 |
| 4. கட்டடவாக்கம் ... | 9,765 | 10,400 | 11,024 | 7.1 | 7.0 | 7.0 | 635 | 624 | 6.0 | 7.9 |
| 5. மின்வலு, வாயு, நீர், நலத்துறைப் பணிகள் ... | 1,897 | 2,125 | 2,335 | 1.4 | 1.4 | 1.5 | 228 | 210 | 2.1 | 2.7 |
| 6. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல் ... | 16,606 | 17,287 | 17,823 | 12.0 | 11.6 | 11.4 | 681 | 536 | 6.4 | 6.8 |
| 7. மொத்த, சில்லறை வர்த்தகம் ... | 30,074 | 32,584 | 34,667 | 21.8 | 21.9 | 22.1 | 2,510 | 2,083 | 23.5 | 26.3 |
| 7.1 இறக்குமதி ... | 11,714 | 13,436 | 14,699 | 8.5 | 9.0 | 9.4 | 1,722 | 1,263 | 16.1 | 15.9 |
| 7.2 ஏற்றுமதி ... | 3,695 | 4,190 | 4,276 | 2.7 | 2.8 | 3.0 | 495 | 536 | 4.6 | 6.8 |
| 7.3 உள்நாடு ... | 14,665 | 14,958 | 15,242 | 10.6 | 10.1 | 9.7 | 293 | 284 | 2.8 | 3.6 |
| 8. வங்கித் தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து .... | 7,241 | 8,023 | 8,785 | 5.2 | 5.4 | 5.6 | 782 | 762 | 7.3 | 9.6 |
| 9. குடியிருப்புக்களின் உடைமை ... | 3,795 | 3,841 | 3,887 | 2.7 | 2.6 | 2.5 | 46 | 46 | 0.4 | 0.6 |
| 10. பொது நிருவாகமும் பாதுகாப்பும் ... | 6,449 | 6,642 | 6,848 | 4.7 | 4.5 | 4.4 | 193 | 206 | 1.8 | 2.6 |
| 11. பணிகள் (வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை) ... | 5,714 | 5,828 | 5,974 | 4.1 | 3.9 | 3.8 | 114 | 146 | 1.1 | 1.8 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 140,990 | 150,783 | 159,269 | 102.1 | 101.4 | 101.7 | 9,793 | 8,486 | 91.8 | 107.2 |
| 13. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருவாய் | (2,916) | (2,039) | (2,607) | -2.1 | -1.4 | -1.7 | 877 | -568 | 8.2 | -7.2 |
| 14. மொத்தத் தேசிய உற்பத்தி ... | 138,074 | 148,744 | 156,662 | 100.0 | 100.0 | 100.0 | 10,670 | 7,918 | 100.0 | 100.0 |

* தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

வளர்ச்சியானது தனியார்துறையின் வீடமைப்பு மற்றும் வர்த்தக மற்றும் கைத்தொழில் கட்டடங்களின் கட்டுமான நடவடிக்கைகளின் விரிவாக்கத்தைப் பிரதிபலித்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1994 இல் அரசதுறையின் கட்டடவாக்க நடவடிக்கைகள் ஒப்பீட்டு அடிப்படையில் தாழ்ந்த மட்டத்தில் காணப்பட்டது. கட்டுமானத்துறையின் சுறுசுறுப்பான செயலாற்றமானது 1993 இன் 11 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1994 செத்தெம்பரில் முடிவடைந்த 12 மாதகாலத்தில் இது 38 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்த வீடமைப்பு மற்றும் உண்மைச் சொத்து அபிவிருத்தி நோக்கங்களுக்காக வங்கித்தொழில் துறையினால் கட்டடவாக்கத்திற்கு வழங்கப்பட்ட கடன்களின் பெறுமதியிலும் பிரதிபலிக்கப்பட்டது.

1993 இன் 11.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் சுரங்க அகழ்வு கல்லுடைத்தல் துறை 6.0 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இத்துறையின் வளர்ச்சிக்கு உதவிய காரணிகளாக இரத்தினக் கற்களின் அதிகரித்த ஏற்றுமதிகள் தயாரிப்பு மற்றும் கட்டுமானக் கைத்தொழில்களினால் பயன்படுத்தப்பட்ட கல்லுடைத்தல் உற்பத்திப் பொருட்களின் அதிகரித்த கேள்வி என்பன விளங்கின. 1994 இல் அருங்கற்கள் மற்றும் அவைசார்ந்த கற்கள் என்பனவற்றின் ஏற்றுமதித்தொகுதி 1.3 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் ஏற்றுமதிப் பெறுமதி 9.8 சதவீதத்தினால் சிஎஉ 551 இலட்சத்திற்கு அதிகரித்தது. எனினும் முக்கிய கனிப்பொருட்களான காரீயம் மற்றும் கனிப்பொருள் மணல் என்பனவற்றின் வெளியீடு பின்னடைவினைக் கொண்டிருந்தது. இதன்விளைவாக மாணிக்கக்கல் அகழ்வினை முதன்மைப் பொருளாதார நடவடிக்கையாகக் கொண்ட சுரங்க அகழ்வுத் துணைத்துறை 1.5 சதவீதத்தினால் வளர்சியடைந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1994 இல் கல்லுடைத்தல் துணைத்துறை 8 சதவீத உண்மை வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்து சுரங்க அகழ்வு கல்லுடைத்தல் துறையின் கூட்டிய பெறுமதியின் அதிகரிப்பில் 75 சதவீதத்திற்கு வகைகூறியது.

1994 இல் பொதுவான பணிகள் துறை மேலும் விரிவடைந்து முன்னைய ஆண்டின் 6.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் கூட்டிய பெறுமதியில் 5.2 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. பணிகள் துறையில் போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் துறை 3.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இது பெரும்பாலும் பொருளாதாரத்தின் முதலாந்தர, இரண்டாந்தர துறைகளின் பொருளாதார நடவடிக்கைகளின் விரிவாக்கத்தின் விளைவாக வீதிவழிப் போக்குவரத்து நடவடிக்கைகளில் ஏற்பட்ட அதிகரிப்பினதும் இயலளவு விரிவாக்கத்திற்காக அண்மைய ஆண்டுகளில் கணிசமான மூலதன முதலீடுகள் மேற்கொள்ளப்பட்ட துணைத்துறையான தொடர்பூட்டல் பணிகளின் விரிவாக்கத்தினதும் இணைந்த விளைவாக ஏற்பட்டதாகும்.

இறக்குமதி ஏற்றுமதி வர்த்தகத்தின் விரிவாக்கத்தின் முதன்மைக் காரணத்தினால் மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை வர்த்தகத்துறை பொதுவான 6.4 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இத்துறையின் விரிவாக்கமானது 1994 இன் உண்மை மொத்தத் தேசிய உற்பத்தியின் மொத்த அதிகரிப்பின் 26.3 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தது. 1994 இல் ஏற்றுமதி வர்த்தகம் 12.8 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்த வேளையில் இறக்குமதித்துறை 9.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

இவ்வாண்டுக் காலத்தில் அதியுயர் மழைவீழ்ச்சியானது 1994 இல் நீர்மின்வலு உருவாக்கத்தின் 7.7 சதவீத அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்தது. 1994 இல் உருவாக்கப்பட்ட மொத்த மின்வலு 4,364 கிகாவாட் மணித்தியாலங்களாக விளங்கி 1993 இனைவிட 9.7 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. இதுவும், அண்மைக்கால மூலதன முதலீடுகளினால் சாத்தியமாக்கப்பட்ட குழாய்நீர் விநியோக விரிவாக்கமும் மின்வலு, நீர்வழங்கல், வாயு மற்றும் சுகாதாரப் பணிகள் துறையின் உயர் வளர்ச்சி வீதத்தினைப் பேணுவதற்குப் பங்களிப்புச் செய்த முதன்மைக் காரணிகளாக அமைந்தன.

1993 இன் 10.8 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1994 இல் வங்கித் தொழில், நிதி மற்றும் உண்மைச் சொத்துத்துறை 9.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. நிதியியல் பணிகளின் பாரிய பன்முகப்படுத்தலைத் தொடர்ந்து ஆய்வுக்குரிய காலப்பகுதியில் வங்கித்தொழில்துணைத்துறை மிகவும் வலுப்பெற்றுக் காணப்பட்டது.

1993 இல் பின்னடைவினைக் கொண்டிருந்த சுற்றுலாத் துணைத்துறை 1994 இல் சுற்றுலா வருகைகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி வருவாய் ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்ட முறையே 3.9 சதவீத மற்றும் 10.2 சதவீத (சிஎஉ பெறுமதி) அதிகரிப்புக்களின் காரணமாக மீட்சியடைந்தது. சுற்றுலாக் கைத்தொழிலின் விரிவாக்கமானது 1993 உடன் ஒப்பிடுகையில் "ஏனைய பணிகள்" துறையில் 1994 இல் 2.5 சதவீத உயர்ந்த வளர்ச்சி வீதத்தினை எய்துவதற்கு இயலச் செய்தது.

## செலவு

நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டுச் செலவு ரூ. 648 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளதோடு 1993 இற்கு மதிப்பிடப்பட்ட ரூ. 547 பில்லியனைவிட 18.3 சதவீத அதிகரிப்பாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1994 இல் நுகர்வுச் செலவு உயர் அதிகரிப்பு வீதமொன்றைப் பதிவுசெய்த வேளையில் முதலீட்டுச் செலவில் சிறிதளவு மிதமான தன்மையொன்று காணப்பட்டது. 1994 இல் ரூ. 491 பில்லியன் என மதிப்பிடப்பட்ட நுகர்வுச் செலவு முன்னைய ஆண்டைவிட 17.0 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்த வேளையில் மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் 22.4 சதவீதத்தினால் ரூ. 157 பில்லியனுக்கு அதிகரித்தது. தனியார் நுகர்வு 16.4 சதவீதத்தினால் அதிகரித்து ரூ. 435 பில்லியன் மட்டத்தினை எய்திய வேளையில் அரசின் நுகர்வு 22.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. 1993 இல் அவதானிக்கப்பட்ட செலவுப் போக்கினை தொடரும் வகையில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளின் மீதான தனியார் நுகர்வுச் செலவு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மீதான செலவினைவிட (13.6 சதவீதம்) உயர் வீதமொன்றில் (24 சதவீதம்) அதிகரித்தது. இறக்குமதி செய்யப்பட்ட நுகர்வுப் பொருட்களில் உணவு, குடிபானம், மற்றும் மோட்டார் வாகனங்கள் மின் உபகரணங்கள் போன்ற நீண்டகால நுகர்வுப் பொருட்கள் என்பன கணிசமான வளர்ச்சியினைப் பதிவு செய்தன. 1994இல் அரசின் பொருட்கள் பணிகளின் கொள்வனவுகள் 22 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தமையின் காரணமாக அரச நுகர்வுச் செலவின் வளர்ச்சி வீதம் அதியுயர்

## அட்டவணை 1.7

### மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடுகளும் 1982 – 1994

| விடயம் | நடைமுறைச் சந்தை விலைகளில் (ப. இ. ரூ.) | | | | 1982 விலைகளில் | | | | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1982 | 1992* | 1993* | 1994* | 1982 | | 1992* | | 1993* | | 1994* | | 1992 இற்கு மேலாக 1993 | 1993 இற்கு மேலாக 1994 |
| | | | | | தொகை ப.இ.ரூ | % | தொகை ப.இ.ரூ | % | தொகை ப.இ.ரூ | % | தொகை ப.இ.ரூ | % | | |
| 1. மொத்த மூலவளங்கள் ... | 145,143 | 599,791 | 716,304 | 843,397 | 145,143 | 100 | 215,077 | 100 | 235,016 | 100 | 254,783 | 100 | 9.3 | 8.4 |
| 1.1 மொ. உ. உ. சந்தை விலைகளில் .. | 99,238 | 425,283 | 499,760 | 578,795 | 99,238 | 68 | 147,996 | 69 | 158,208 | 67 | 167,068 | 66 | 6.9 | 5.6 |
| 1.2 பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள் .. | 45,905 | 174,508 | 216,544 | 264,602 | 45,905 | 32 | 67,081 | 31 | 76,808 | 33 | 87,715 | 34 | 14.5 | 14.2 |
| 2. பயன்பாடு ... | 145,143 | 599,791 | 716,304 | 843,397 | 145,143 | 100 | 215,077 | 100 | 235,016 | 100 | 254,783 | 100 | 9.3 | 8.4 |
| 2.1 நுகர்வு ... | 87,468 | 361,438 | 419,576 | 491,032 | 87,468 | 60 | 130,412 | 61 | 139,729 | 59 | 148,657 | 58 | 7.1 | 6.4 |
| 2.2 மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் ... | 30,279 | 100,039 | 126,070 | 154,310 | 30,279 | 21 | 35,399 | 16 | 39,946 | 17 | 43,571 | 17 | 12.8 | 9.1 |
| 2.2.1 அரசு ... | 4,866 | 13,632 | 20,765 | 18,455 | 4,866 | 3 | 4,165 | 2 | 5,531 | 2 | 4,530 | 2 | 32.8 | -18.1 |
| 2.2.2 கூட்டுத்தாபனங்கள் } 2.2.3 தனியார்துறை | 25,413 | 86,407 | 105,305 | 135,855 | 25,413 | 18 | 31,234 | 14 | 34,415 | 15 | 389,041 | 15 | 10.2 | 13.4 |
| 2.3 இருப்புக்களில் மாற்றம் ... | 248 | 3,200 | 1,800 | 2,250 | 248 | 0 | 622 | – | 325 | – | 387 | – | -47.7 | 19.1 |
| 2.4 பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் ... | 27,148 | 135,114 | 168,858 | 195,805 | 27,148 | 19 | 48,644 | 23 | 55,016 | 24 | 62,168 | 25 | 13.1 | 13.0 |

* தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

வானதாகக் காணப்பட்டது. (1993 இன் 11.8 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 22.5 சதவீதம்).

இருப்புக்களின் மாற்றங்களையும் உள்ளடக்கிய மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் 1993 இன் 23.9 சதவீத அதிகரிப்புக்கு எதிராக 1994 இல் 22.4 சதவீதத்தினால் ரூ. 157 பில்லியனுக்கு அதிகரித்தது. அண்மைய ஆண்டுகளின் போக்கினைப் பின்பற்றும் வகையில் மூலதனவாக்கத்துக்கான பாரிய பங்களிப்பு தனியார் துறையிலிருந்தே கிடைக்கப்பெற்றது. தனியார் முதலீடுகள் முக்கியமாக பொறிகளும், கருவிகளும், போக்குவரத்து உபகரணங்கள், வதிவிட மற்றும் வதிவிடமல்லா கட்டடங்களின் நிருமாணம் என்பனவற்றில் காணப்பட்டது. இதேவேளையில் அரச முதலீடானது துறைமுகப் பணிகள், தொலைத்தொடர்பு, தெருக்கள், குழாய் நீர் வழங்கல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்கே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

## மூலவளங்களின் கிடைத்தலும் பயன்பாடும்

மொத்த உள்நாட்டு உற்பத்தியையும் பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளினது இறக்குமதிகளையும் உள்ளடக்கிய பொருளாதாரத்தின் பயன்பாட்டுக்காக கிடைத்த மூலவளங்களின் மொத்தப் பெறுமதி 1993 இன் ரூ. 716 பில்லியனிலிருந்து 1994 இல் ரூ. 843 பில்லியனுக்கு 17.7 சதவீதத்தால் அதிகரித்தது. 1993 இல் இது தொடர்பான அதிகரிப்பு 19.4 சதவீதமாக இருந்தது. 1994 இல் மூலவளங்களில் ஏற்பட்ட ரூ. 127 பில்லியன் கொண்ட மொத்த அதிகரிப்பு நடைமுறைச் சந்தை விலைகளில் மொ. உ. உ. இல் ஏற்பட்ட ரூ. 79 பில்லியன் கொண்ட அதிகரிப்பினதும் பொருட்களினதும் மற்றும் காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகளில் ஏற்பட்ட ரூ. 48 பில்லியன்கொண்ட அதிகரிப்பினதும் கூட்டுத்தொகை ஆகும். பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள் 1993 இன் 24.1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1994 இல் 22.2 சதவீதத்தால் அதிகரித்தன. முன்னைய ஆண்டின் 9.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1994 இல் உண்மை நியதிகளில் கிடைக்கத்தக்க மூலவளங்கள் 8.4 சதவீதத்தால் அதிகரித்தன.

பொருளாதாரத்திற்குக் கிடைத்த மொத்த மூலவளங்களின் பயன்பாடு 58.2 சதவீதம் நுகர்விலும் 18.6 சதவீதம் மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கத்திலும் (முதலீடு) 23.2 சதவீதம் பொருட்களினதும் மற்றும் காரணியல்லா பணிகளினதும் ஏற்றுமதியிலும் அமைந்தமையைக் காட்டுகின்றது. பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளின் மொத்த ஏற்றுமதிகள் பெயரளவு நியதிகளில் 1993 இன் 25.0 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1994 இல் 16 சதவீதத்தால் அதிகரித்தன. 1994 இல் பெயரளவு நுகர்வுச் செலவு முழுமை நியதியில் 17.0 சதவீதத்தால் அதிகரித்தவேளையில் மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் 22.4 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வாறே 1994 இல் உண்மை நியதிகளில் நுகர்வு 6.4 சதவீதத்தால் அதிகரித்தது. 1994 இல் மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் உண்மை நியதிகளில் 9.2 சதவீதத்தால் அதிகரித்தது. கட்டடவாக்கம் மற்றும் போக்குவரத்துக் கருவிகள் மீதான முதலீடுகளில் ஏற்பட்ட வளர்ச்சி மூலதனவாக்கத்தில் மிகவும் குறிப்பிடத்தக்கதாக அமைந்தது.

## அட்டவணை 1.8

## நடைமுறைச் சந்தை விலைகளில் தேசிய சேமிப்புக்கள்

(ப.இ. ரூபாய்களில்)

| | 1982 | 1992* | 1993* | 1984* |
|---|---|---|---|---|
| 1. மொ. உ. உ. சந்தை விலைகளில் | 99,238 | 425,283 | 499,760 | 578,795 |
| 2. உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 11,770 | 63,845 | 80,184 | 87,763 |
| 3. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | -1,959 | -7,821 | -5,979 | -8,028 |
| 4. வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் மாற்றல்கள் | 5,494 | 20,253 | 27,090 | 30,989 |
| 5. தேசிய சேமிப்புக்கள் | 15,305 | 76,277 | 101,295 | 110,724 |
| 6. உள்நாட்டு சேமிப்பு விகிதம் (1 இன் சதவீதமாக 2) | 11.9 | 15.0 | 16.0 | 15.2 |
| 7. தேசிய சேமிப்பு விகிதம் (1 இன் சதவீதமாக 5) | 15.4 | 17.9 | 20.3 | 19.1 |

* தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி